**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 244/2022**
**நாள் 18/12/2024 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - ஓம் ஹரிஹரன் | த/பெயர் - இளங்கோ |
| வயது - 33 | தொழில் - |
| விலாசம் - ஈஸ்வரன் கோயில் தெரு, சுண்ணாம்புகுளம் கிராமம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

பிரதிவாதி என்னிடம் எப்போது கடன் கேட்டார் என்றால் 2015 ஜனவரி மாதம் கடன் கேட்டார். பிரதிவாதியை எனக்கு எனது தந்தையின் நண்பர் என்ற முறையில் தெரியும். பிரதிவாதிக்கு ரூபாய் 2,10,000/- யை பணமாகவே கொடுத்தேன். மேற்படி பணத்தை கும்மிடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். மேற்படி பணத்தை 2 வருடத்திற்குள் கொடுக்கவேண்டும் என்று காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி தொகைக்கு 2 சதவிகிதம் மாதவட்டி என நிர்ணயிக்கப்பட்டது. பிரதிவாதி நவம்பர் மாதம் 2021 வரை மேற்படி தொகைக்கு வட்டியை செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அதிகமாக பணம் வசூலிக்கவேண்டும் என்பதால் பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2022ம் வருடம் 4ம் மாதம் முதல் அறிவிப்பு கொடுத்தேன். நான் சுமார் 7 வருடம்

கழித்து தான் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு உரிய வட்டியை செலுத்தாமல் இருந்திருந்தால் நான் 7 வருடம் வரை அறிவிப்பு கொடுக்காமல் இருந்திருக்க வாய்ப்பு இல்லை என்றாலும் பிரதிவாதி எனக்கு 2021 நவம்பர் வரை வட்டி செலுத்தியதால் தான் அதன் பின்னிட்டு இந்த அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி செலுத்தும் வட்டிக்கு ஆதாரம் எதுவும் தருவதில்லை எ்னறாலும் அதனால் தான் பிரதிவாதி வட்டியே கொடுக்கவில்லை என பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி மேற்படி தொகையை செலுத்த கால அவகாசம் கேட்டதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், எனது பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் பிரதிவாதி பணத்தை திருப்பி தர காலஅவகாசம் கேட்டதாக எதிர்வழக்குரையில் கூறியுள்ளதை மறுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி அறிவிப்பில் நவம்பர் 2021 வரை வட்டி கொடுத்ததாகவும் அதன் பிறகு குடும்ப கஷ்டத்தின் காரணமாக வட்டி கொடுக்க இயலவில்லை என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். நான் மறுபடியும் 2022ம் வருடம் ஜூன் மாதம் பிரதிவாதிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினேன். அதற்கும் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினார். எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 3 ல் 8 வது வரியில் இருந்து 12 வரி வரை கூறியுள்ள சங்கதிகள் எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல.

வழக்குரையில் பத்தி 6 ல் 9 வது வரியில் இருந்து 12 வரி வரை உள்ள விவரங்களை முதன்மை பிரமாண வாக்குமூலத்தில் கூறாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி நவம்பர் 2021 வரை நாளைய தேதி வரையிலான வட்டியை அசலுடன் சேர்த்து செலுத்தி அடமான பத்திரத்தை திரும்ப பெற்றுக்கொள்ள தயாராக உள்ளார் என்றும் நான் தான் தேவையில்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் கூறியுள்ள அசல் மற்றும் வட்டி தொகைகள் தவறானது என்றும் பிரதிவாதியிடம் இருந்து அதிக பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக கூறியுள்ளேன் என்றால் சரயில்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**